ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த
# கண்ணிநுண்சிறுத்தாம்பு
# எட்டாம் பாசுர வ்யாக்யான ஸாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு எட்டாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வருமறையின் பொருள்
அருள் கொண்டு ஆயிரம் இந்தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே

அர்த்தம்:
எம்பெருமான் க்ருபையை கொண்டாடுகிற பக்தர்கள் ஆநந்தம் அடையும்படி அந்த அருமையான வேதங்களுடைய உள் பொருள்களை அருளிச் செய்யும் நம்மாழ்வார், அவன் க்ருபையாலே இனிய தமிழ் மொழியில் அமைந்த திருவாய்மொழி ஆயிரத்தைப் பாடினார். அந்த க்ருபை ஒன்று மட்டுமே இவ்வுலகினில் பெரியதாய் இருக்கின்றது.

வ்யாக்யான சாரம்:
வேத ரஹஸ்யங்களை வெளியிட்ட எம்பெருமானுடைய க்ருபையைக் காட்டிலும் திருவாய்மொழியை வெளியிட்டு அருளிய நம்மாழ்வாருடைய க்ருபை இவ்வுலகிற்கு பெரியதாகும் என்கிறார். எண்திசையும் அறிய இயம்புகேன் என்று முன் சொன்னதை இப்பாட்டில் நம்மாழ்வாருடைய பாசுரங்கள் வேத சாரம் என்று விளக்குகிறார்.

அருள் கொண்டாடும் அடியவர்:
தம்மைப் போலே இருக்கும் அடியார்கள் ("அதுவும் அவனது இன்னருள்", "அருள் பெறுவார் அடியார்") என்கிறார்.

இன்புற:
ஆனந்திப்பதே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்; அவன் அருளை நினைத்து ஆனந்திக்கிறார்கள் ("ஹ்ருஷ்டா:") என்கிறார். "எண்ணாதனகளெண்ணும்

நன்முனிவர் இன்பம் தலைச் சிறப்ப" என்கிறபடி ஆனந்தம் அடைவார்கள்.

அருளினான் அவ்வருமறையின் பொருள்:
பரம ரஹஸ்யமான வேதார்த்தப் பொருள்களை கீதையாக எல்லோரும் அறியும்படி வெளியிட்டான் எம்பெருமான். வேதங்கள் அர்த்தத்தை மறைத்து வைத்தாலும், அவன் தன் உயர்ந்த குணத்தினால் அதை கீதை மூலமாக ப்ரகாசித்தான்.

அருமறை:
அவனை அடைவதை விட அரியதாயிருக்கும் மறை இன்பம். வேதம், அவற்றின் அர்த்தமே அனைத்திலும் பெரும் செல்வம் ("சா ஹி ஸ்ரீரம்ருதா சதாம்").

அருள் கொண்டு ஆயிரம் இந்தமிழ் பாடினான்:
வேதம் அறிந்த அதிகாரிகள் உய்யும்படி எம்பெருமான் அருளிச் செய்தான்; நம்மாழ்வாரோ அனைவரும் உய்யும்படி அருளிச் செய்தார்.

அருள் கொண்டு:
நம்மாழ்வார் தாமாகவே த்மக்கு தோன்றியதைப் பாடவில்லை; அவன் அளித்த மயர்வற மதிநலம் கொண்டு அவனை முதலாக வைத்தே பாடினார். அவர் மூலமாகத் தன்னைத் தானே கவி பாடுவித்துக் கொண்டான் எம்பெருமான் ("என்னாகியே தப்புதலின்றித் தனைக் கவி தான் சொல்லி").

ஆயிரம் இந்தமிழ்:
வால்மீகி ரிஷி ராமாயணத்தைப் பாடியதைப் போல நம்மாழ்வார் ஆயிரம் பாசுரங்களைப் பாடினார்.

இந்தமிழ் பாடினான்:
சொல்லவும், பாடவும் இனிமையாய் ("பட்யே கேயே ச மதுரம்") உயர்ந்த அர்த்தத்தைப் பாடினார் நாம்மாழ்வார்.

இந்தமிழ்:
படிக்கும் போதும், கேட்கும் போதும், பாடும் போதும் இனிமையைக் கொண்டதாயிருப்பது.

பாடினான் அருள் கண்டீர்:
மயரவற மதிநலம் அருளியவன் அருள் போல் அல்லாமல், அவனுடைய அருளை விளக்குவதாய் இருப்பது நம்மாழ்வார் அருள். அவ்வருளைக் காணுங்கள் என்கிறார்.

அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே:
அவன் அருள் ("மயர்வற மதிநலம் அருளினன்") ஒரு சிலரை மட்டுமே அடையும். நம்மாழ்வார் அருளோ அனைவரையும் அடையும் ("பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்", தொண்டர்க்கமுது உண்ணச் சொன்மாலைகள்").

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்